மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

நான் இந்தக் கேள்வியைக் கேட்டு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு கட்டடப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். ஈரோடு மேற்குப் பகுதியில் அல்ல. ஈரோடு கிழக்குப் பகுதியில்தான் அந்தப் பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்கள்.

40—

பனை வெல்ல ஆலை

***13516—திருமதி நா. மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, மத்தூரிலுள்ள மாவட்ட பனை வெல்ல விற்பனை கூட்டுறவுச் சம்மேளனம் மூலமாக பனை வெல்ல ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. பாஸ்கரன், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊத்தங்கரை தொகுதி, மத்தூரிலுள்ள மாவட்ட பனை வெல்ல கூட்டுறவுச் சங்கம் மூலமாக பனை வெல்ல சர்க்கரை

2019 ஜூலை 4]

ஆலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம் அவர்கள்.*

திருமதி நா. மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இந்த இடைத்தேர்தலில் எதிரிகளுக்கெல்லாம் ஒரு கரும்புள்ளி வைத்த, துரோகிகளுக்கெல்லாம் ஒரு கரும்புள்ளி வைத்த மாண்புமிகு கொங்குநாட்டுத் தங்கம், மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், தென்பாண்டி சிங்கம், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

ஊத்தங்கரை தொகுதி, மத்தூரில் மாவட்ட பனை வெல்ல சர்க்கரை ஆலையை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால்,இங்கு பனை வெல்லத் தொழிலில் ஈடுபடுவோர் நிறைய பேர் இருக்கின்றார்கள். இப்பொழுது, சர்க்கரை வியாதிகாரர்களின் அதிகரிப்பால் சர்க்கரை விற்பனை குறைந்துவிட்டது. பனை வெல்லம்தான் மூலிகைப் பொருளாக இருக்கின்றது. கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் 40 Society-*கள் செயல்பட்டு வருகின்றன. அங்கிருக்கின்ற ஆயிரக்கணக்கான பனை வெல்லக் தொழிலாளர்கள் மரம் ஏறுகின்றனர். பனை வெல்லத்தை விற்பதன்மூலம் கிடைக்கும் வருமானத்தில்தான் அவர்களது குடும்பங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அந்தக் குடும்பங்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டுமென்றால், அங்கு பனை வெல்ல ஆலை ஒன்றை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, இதனைப் பரிசீலிக்க முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2019 ஜூலை 4

மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை தொகுதிக்குட்பட்ட மத்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நிலவிவரும் கடும் வறட்சியின் காரணமாக பனை மரங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால், பனை மரம் ஏறுவது போன்ற கடினமான தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் வெவ்வேறு வேலை தேடி வெளியூர்களுக்கு இடம்பெயர்ந்துவிட்டனர். ஊத்தங்கரை தொகுதிக்குட்பட்ட, மத்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பனை வெல்ல சர்க்கரை ஆலைக்குத் தேவையான அளவு பதநீர் கிடைக்கப்பெறாததால், ஏற்கெனவே 1997 ஆம் ஆண்டு வரை செயல்பட்டு வந்த தருமபுரி மாவட்ட மத்தூர் கூட்டுறவுச் சம்மேளன பனஞ்சீனி உற்பத்தி ஆலையைத் தொடர்ந்து இயக்க இயலாத நிலை உள்ளது. இப்பகுதிகளில் பதநீர் உற்பத்தி வெகுவாகக் குறைந்துள்ளதால், ஊத்தங்கரை தொகுதிக்குட்பட்ட மத்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பனை வெல்ல கூட்டுறவுச் சங்கம் மூலமாகப் பனை வெல்ல சர்க்கரை ஆலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம் அவர்கள்.

திருமதி நா. மனோரஞ்சிதம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச்சென்று, இதை மீண்டும் பரிசீலித்து, செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மீண்டும் ஒரு கோரிக்கையாக வைக்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை வெல்லம் உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பாகுபாடு இல்லாமல் 234 உறுப்பினர்கள் அனைவருக்கும் மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் மாதந்தோறும்

2019 ஜூலை 4]

2 பனை வெல்லக் கட்டிகள் வழங்குவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இப்போது தூய்மையான பனை வெல்லம் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. எனவே, மாதந்தோறும் 2 பனை வெல்லக் கட்டிகள் அனைத்து உறுப்பினர்களுக்கும் கிடைக்குமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, வழங்குகிறேன் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, என்னவென்று சொல்லுங்கள்.*

முற்பகல் 11-35

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கேள்விதான் கொடுக்கிறீர்கள். அதிலும் எங்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்டதற்காக வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். செய்யூர் தொகுதியைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட அனைத்துப் பகுதிகளிலுமே, கிழக்குக் கடற்கரைச் சாலையை ஒட்டியுள்ள பகுதிகள் அனைத்திலுமே பனை வெல்லத் தொழிலாளர்கள் நிறைந்து காணப்படுகின்றனர். அங்கு பனை வெல்லம் தயாரிப்பதற்கான ஒரு தொழிற்சாலையை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் பனை மரங்கள் அதிகமாக உள்ள பகுதி என்பதால், பனஞ்சாறு இறக்குவதற்கான அனுமதியைப் பெற்றுத் தரவும், பனை மரங்களை பராமரிப்பதற்கும் அரசு தனிக் கவனம் செலுத்துவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2019 ஜூலை 4

மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை துறை அலுவலர்கள்மூலம் ஆய்வு மேற்கொண்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டுசென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் தமிழ் மொழியில் மொழியாக்கம் செய்யப்படுவதற்கான தீர்மானம் நிறைவேற்றுதல் மற்றும் உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்கு மொழியாகக் கொண்டுவர ஏற்கெனவே நிறைவேற்றிய தீர்மானத்தை மீண்டும் வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகள் மாநில மொழிகளில் மொழியாக்கம் செய்து வழங்கப்பட வேண்டுமென்று ஒரு செய்தி வந்திருக்கிறது. எனவே, அது விஷயமாக அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.*

உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகளை மாநில மொழியில் பிரசுரிப்பதற்கு மாண்புமிகு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் முன்வந்திருப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அது உள்ளபடியே மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தி.

அரசியல் சட்டம் தந்திருக்கக்கூடிய கூட்டாட்சித் தத்துவத்தின்படி—உச்ச நீதிமன்றம் உறுதியாக நிற்பது மேலும் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தியாக உள்ளது. ஆங்கிலம் தவிர